*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 404/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-10)***

*Name / Father's Name:* ***திரு.குமரேசன் த/பெ. மாரிமுத்து***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29.07.2025.**

துவக்க நேரம் 03.10 A.N

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கெங்கவல்லி, கடம்பூரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கெங்கவல்லி பேருந்து நிறுத்தத்திற்கு சென்றிருந்தேன். அங்கு பேருந்து நிறுத்தத்திற்கு சற்று முன்பாக போலிசார் இருந்தார்கள். அந்த இடத்தில் போலிசார் படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். என்னை சாட்சி கையெழுத்து போடச்சொல்லி கேட்டார்கள். நானும், ரவி என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து எத்தனை வெள்ளைத்தாள்களில் கையெழுத்து போட்டேன் என்றால் காவல் நிலையத்தில் கையெழுத்து போடவில்லை. நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது, நான் படித்து பார்க்கவில்லை. நான், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு, போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்பொழுது சம்பவயிடத்தில் கையெழுத்து போட்டதாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார், என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

முடிவு நேரம் 03.17 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.29 16:29:56 +0530

Judicial Magistrate No.2, Attur.